தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–2220 0337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 0043/2017/ந

ஆணை எண்: 159/2017

நாள்: 19/06/2017

திரு. K. சுப்பராயன்,
3/139, பாரதி நகர்,
மோகனூர் தெரு,
நாமக்கல் – 637 001.

– முறையீட்டு மனுதாரர்

1) திரு. செந்தில் முருகன்,
நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி, நாமக்கல் – 637 001.

2) திரு. கமலநாதன்,
நகராட்சி பொறியாளர்,
நாமக்கல் நகராட்சி, நாமக்கல் – 637 001.

– எதிர் மனுதாரர்கள்

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் திரு. K. சுப்பராயன் என்பவரது 07.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு அன்றைய தினமே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0043/2017- ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் அரசாணை எண்.360, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள்:28.12.1988ன்படி மாவட்ட அளவிலான தன்னார்வ நுகர்வோர்

அமைப்புகளுடனான காலாண்டுக் குறை தீர் கூட்டம் நடத்தப்பட வேண்டுமென நாமக்கல் நகராட்சிக்கு பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டும் அத்தகைய கூட்டங்களை நடத்தவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்குறிப்பிட்ட அரசாணையின் நகலினையும், நீதிப்பேராணை எண்.2548/2013ன் மீதான மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற 05.11.2017 நாளிட்ட ஆணையின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார். மேலும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். நுபா2/3658/2013 நாள்: 31.01.2014ன் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனு தொடர்பாக பதிலறிக்கையினை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0043/2017/ந நாள்:10.0.2017ன் மூலம் நாமக்கல் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், 26.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணையும் (மு.ம.எண்.0043/2017/ந நாள்:20.03.2017) அனுப்பப்பட்டது.

26.04.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டில் கூறிய புகார்களையே குறிப்பிட்டு மீள வலியுறுத்தினார். இருப்பினும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட பாதுகாப்பு குழு உறுப்பினர் பட்டியல் விவரம் கோரியபோது, அந்தப் பட்டியல்/அரசிதழ் நகல் தன்னிடம் தற்போது இல்லை எனவும் ஆனால், அப்பட்டியலில் தான் செயலாளராக உள்ள தமிழ்நாடு பயனீட்டாளர்கள் சங்கமும் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், மனுதாரர் குறிப்பிடும் காலாண்டு குறைதீர் கூட்டங்கள் நகராட்சியில் நடத்தப்பட வேண்டுமென்ற குறிப்பான ஆணைகள் ஏதும் மேற்படி ஆவணங்களில் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி அத்தகைய குறிப்பான ஆணைகள் ஏதுமிருப்பின் அனுப்பி வைத்திடுமாறு தெரிவித்து மனுதாரர் கோரியவாறு கால அவகாசம் (10 நாட்கள்) அளிக்கப்பட்டது. மனுதாரர் அத்தகைய ஆணை/ஆவணம் எதனையும் சமர்ப்பிக்கவில்லை.

மேலும், நாமக்கல் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3501/2017/எப்1 நாள்: 02.05.2017ல் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு குறைதீர் கூட்டம் நடைபெற்று வருகிறது. மேற்படி கூட்டத்தில் தமிழ்நாடு பயனீட்டாளர் சங்க செயலாளரும் கலந்து கொண்டு நகராட்சி பகுதி தொடர்பான குறைகளை தெரிவித்து வருகிறார்கள். அக்குறைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக நகராட்சிக்கு அனுப்பப்பட்டு அவைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக நாமக்கல் நகராட்சியில் நுகர்வோர் அமைப்புகளுடன் தனியே காலாண்டு கூட்டங்கள் நடத்தப்படவில்லை. இருப்பினும் வருகின்ற மே மாதம் 15ஆம் தேதிக்குள் இக்கூட்டம் நடத்தப்படும்."

மனுதாரர் கோரியுள்ளது போன்ற காலாண்டு கூட்டத்தினை நகராட்சியில் நடத்திட வேண்டுமென்பதற்கான குறிப்பான விதிகளோ, ஆணைகளோ, நீதிமன்ற ஆணையோ இல்லாத நிலையில் அவ்வாறு வலியுறுத்திட இயலாது. இருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அத்தகைய குறைதீர் கூட்டங்கள் நடத்தப்படுவதால் மனுதாரர் தனது கோரிக்கைகளை அங்கு எடுத்துரைக்க வழிவகை உள்ளதென சுட்டிக்காட்டி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு [illegible]ணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
1. திரு. K. [illegible],
   3/139, பாரதி நகர்,
   மோகனூர் தெரு,
   நாமக்கல்,
   நாமக்கல் மாவட்டம் – 637 001.
2. நகராட்சி ஆணையர்,
   நாமக்கல் நகராட்சி,
   நாமக்கல் – 637 001.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியரகம்,
நாமக்கல், நாமக்கல் மாவட்டம்.